www.tamilarangam.net

புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்த ஐந்து அமைச்சர்களை நியமித்தார் பிரேமதாசா.

தம்முடன் பேச்சு நடத்தும் அமைச்சர்கள் தங்களுக்கு பிடிக்காதவர்களாக இருக்கக்கூடாது என்று புலிகள் கூறி விட்டனர்.

யாழ் நூலகத்தை பொசுக்கிய நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய காமினி திசநாயக்கா, தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து கடும் போக்காளராக நடந்து கொண்ட அத்துலத் முதலி இருவரும் பேச்சில் கலந்து கொள்வதை புலிகள் விரும்பவில்லை.

அதனால் புலிகளுடன் பேச நியமிக்கப்பட்ட அமைச்சர்களில் அந்த இரண்டு பேரும் இடம் பெறவில்லை.

காமினியும், அத்துலத் முதலியும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற பட்டியலில் இருந்தனர்.




# அசியல் தொடர்

## அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

தலைமை கள் பேச்சுவார்த்தைகளை தங்கள் அரசியல் இருப்பிற்கான விடயமாகக் கருதின. அதற் குப் பயன்படுத்தின. நாம் அவர்களைப் போலன்றி, இந்தியா வெளியேறும்வரை யுத்த நிறுத்தம் என்பதற்கே இடமில்லை என்று பிரகடனப்படுத்திய போர்க் குணாம்சம் கொண்டவர்களாகவே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கிறோம்.

உயிர் வாழ்வதற்கான கவசமாக பயன் படுத்துவதை நோக்கமாகக் கொண்டோ, அல்லது பலவீனத்தின் வெளிப்பாடாகவோ

ஏனைய இயக்கங்களுக்கு பயந்து அரசியலில் ஈடுபட பிரபாகரன் தயங்கியிருக்கலாம் என்று கருதுவது எவ்வகையிலும் சரியாக இருக்காது. ஏனெனில் அந்த இயக்கங்களின் பலமும், பலவீனமும் புலிகள் அறியாததல்ல.

இன்று புலிகளின் அச்சுறுத்தல் மத்தியில் கூட ஏனைய இயக்கங்கள் உயிரைப் பணயம் வைத்து அதிகாரப் போட்டியில் குதித்துள்ளன.தேர்தலில் பங்கு கொள்கின்றன. இந்த இயக்கங்களே அவ்வாறு துணியும்போது புலிகள் இந்த இயக்கங்களை நினைத்து

கொட்டித் தரப்போகிறது. திட்டங்கள் தயார் என்று ஒரு அறிவிப்பு வரும்.

பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்று பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் செய்திகள் வரும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகங்களை நோக்கி மக்கள் படையெடுப்பர். வேலை

இலங்கையில் இருந்து முதற்கட்டமாக திரும்பிய இந்தியப் படையினருக்கு தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் வர வேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்னையில் சென்று இறங்கிய இந் தியப் படையினருக்கு ஏமாற்றம் காத்திருந்தது.

# புலிகளுக்கு நெருக்கமான உதவியாளர் பேச்சுக்கு புலிகள் தந்த விளக்கம்

தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகளாக தங்களால் சுட்டிக் காட்டப்பட்ட மேற்கண்ட அமைச்சர்களுடன் கைகுலுக்குவதை புலிகள் விரும்பவில்லை.

குறிப்பிட்ட அமைச்சர்கள் கலந்து கொள்வதாக இருந்தால், பேச்சை நிறுத்தி விட்டு திரும்பிவாருங்கள் என்பது தங்கள் பிரதிநிதிகளுக்கு பிரபாகரன் போட்டிருந்த உத்தரவு.

யாழ் நூல்நிலைய எரிப்புக்காக காமினி திசநாயக்காவையும், 'வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனில்' நடைபெற்ற

புலிகள் இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

## வெளியேறிய பின்னர்

இந்தியப் படைகள் வெளியேறுமானால் சிறிலங்காப் படைகள் தமிழர்களை அழித் தொழித்துவிடும் என்று இந்திய அரசின் பிரசார சாதனங்கள் கூறிவருகின்றன.

தயங்கியிருப்பர் என்பது வேடிக்கைதானே!

## அமைச்சர் ஹமீத்

பிரேமதாசாவுடன் பேச்சு நடத்த புலிகள் சென்றுவந்த நாட்களில் புலிகளுடன் ஒருவர் நெருக்கமானார், அவர்தான் முகை தீன். பிரேமதாசா வுக்கு நம்பிக்கைக் குரிய உதவியாளராக இருந்தவர்.


பிரேமதாசாவுடன் புலிகள் இயக்கப்பிரதி நிதிகள் மற்றும் பிரேமதாசாவின் மகன் சஜித்.

முகைதீனுடன் புலிகளுக்கு ஏற்பட்ட நெருக்கம் தான், பின்னர் முகைதீனே அறியாமல் அவரை பிரேமதாசாவை தீர்த்துக் கட்டும் திட்டத்துக்கு பயன்படுத்தும் அளவுக்குச் சென்றது.

முகைதீனிடம் இருந்த சில பலவீனங்களை புலிகள் கண்டுகொண்டனர். பிரேமதாசாவின் குகைக்குள் தங்களால் பயன் படுத்தக்கூடிய நபர்

தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் தங்கள் பெயர்களை பதிவு செய்துவிட்டு காத்திருந்தவர் எண்ணிக்கை ஏராளம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு புதிய குடி

அவர்கள் எதிர்பார்த்தளவுக்கு உற்சாகமான வரவேற்பு எதுவும் கொடுக்கப்பட வில்லை.

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி வரவேற்கச் செல்லவில்லை.

## சயனைட் வில்லைகளுடன் கொழும்பில் புலிகள்!

**கொழும்பு, மே 6**

**கொழும்பு சென்றுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் அனைவரும் சயனைட் வில்லைகளை வைத்திருக்கின்றனர்.**

**இது பற்றி கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுத் தலைவர் திரு. யோகியிடம் கேட்டார்.**

**பேச்சுக்கள் நடத்த வந்திருக்கும் இந்த வேளையிலும் சயனைட்வில்லைகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?**

**இக் கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. யோகி, ''ஆம். எங்கள் உயிர் உடலை விட்டுப் பிரியும் வரை சயனைட் வில்லை எங்கள் உடம்பை ஒட்டிக் கொண்டிருக்கும்'' என்று பதிலளித்தார்.**

படுகொலைகளுக்காக அத்துலத் முதலிக்கும் மரண தண்டனை விதிப்பது என்ற முடிவு விடுதலைப் புலிகளால் முன்னரே எடுக்கப்பட்டுவிட்ட முடிவாகும்.

புலிகள் இயக்கத்தினருடன் பேச்சு நடத்துவதற்காக உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத், மின்சக்தி எரிபொருள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, காணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சர் திரு.பி. தயாரத்தினா, தகவல்துறை அமைச்சர் லொக்கு பண்டார ஆகியோர் புலிகளுடன் பேச்சு நடத்த நியமிக்கப்பட்டனர்.

பிரேமதாசா அரசுடன் பேச்சு தொடங்கியதில் இருந்தே புலிகள் வெளியிட்ட கருத்துக்கள் அனைத்தும், பலவீனமான ஒரு தரப்பின் கருத்தாகவோ, மக்களிடம் இலங்கை அரசுமீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாகவோ இருக்கவில்லை.

## பேச்சு ஏன்?

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்துவது ஏன்? என்ற கேள்விகளுக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கம் அளித்திருந்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தை என்பதால், அப் பேச்சுவார்த்தை தொடர்பான புலிகளின் விளக்கத்தை வாசகர்கள் அறிந்திருப்பது அவசியம்.

அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்துக்கள்:

*சர்வதேச அபிப்பிராயத்தை எமக்கு சாதகமாக வென்றெடுத்தல் என்பதோடு, இந்தியப் படைகளை வெளியேற்றுவதற்கான சூழலை உருவாக்கவும், இப் பேச்சுவார்த்தை அவசியமாகிறது.*

*இந்தியப் படைகளை வெளியேற்றுதல் என்பதில் உள்ள அடிப்படை ஒற்றுமை புலிகள், சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை இடம்பெறுவதற்கான அத்திவாரத்தினை அமைத்துக் கொடுத்தது எனலாம்.*

*ஒரு பொது நோக்கத்திற்காக இரு முரண்பட்ட சக்திகள் பேச்சுக்களில் ஈடுபடுவது வரலாற்றில் ஒன்றும் புதுமையல்ல.*

*எமது வரலாற்றினை முன்நோக்கி நகர்த்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதன் அடிப்படையிலேயே, விடுதலைப் புலிகள் சிங்கள அரசுடனான இப் பேச்சுக்களை ஓர் ராஜதந்திர நகர்வாக மேற்கொள்கின்றனர்.*

*மேடை அரசியலை நடத்திய*

*இந்தியா வெளியேறியபின்னர் தமிழீழப் பிரதேசங்களில் சிறீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபட முனையுமானால், விடுதலைப் புலிகள் அதனை எதிர்கொள்வர்.*

*முதலையின் வாயினுள் அகப்பட்டிருக்கும் ஒருவன், தான் முதலையின் பிடியில் இருந்து விடுபட்டு வெளியேறினால், ஆற்றங்கரையின் காடுகளில் உள்ள மிருகங்கள் தாக்கலாம் என்பதால், முதலையின் பிடியில் இருந்து விடுபடத் தயங்குவது எந்தளவு அர்த்தமற்றதோ, அதைப்போலத்தான் இந்திய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபட, சிறீலங்கா ஒடுக்குமுறை குறித்து அஞ்சுவதும் அமைகின்றது.*

*தமிழீழ இலட்சியத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் களப்பலி கொடுத்த விடுதலைப் புலிகள் வெறும் அற்ப சொற்ப அதிகாரங்களுக்காக மக்களையும், உரிமைகளையும் விலைபேச மாட்டார்கள்.*

*பதவிகளை அடைவதையோ, அல்லது சலுகைகளைப் பெறுவதையோ விடுதலைப் புலிகள் நோக்கமாகக் கொண்டிருந்தால், இந்திய அரசினையும், ஆளும் வர்க்கத்தினையும் எஜமானர்களாக ஏற்று இலகுவாக ஆட்சிபீடம் ஏறியிருக்க முடியும்.*

*எத்தனையோ சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இந்தியப் படைகளை எதிர்த்து யுத்தம் நடத்தும் நிலை ஏற்பட்டிருக்காது.*

*மக்களின் உரிமை விடயத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புக்கும் இடம் இல்லை என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள்.*

*போராட்ட வடிவங்கள் மாறலாம், ஆனால் போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை"*

மேற்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டது.

## தவறான வியாக்கியானம்

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பிரபாகரன் அதிகாரத்தை விரும்புகிறார் என்று ஏனைய இயக்கங்கள் கூறியது உண்டு.

பிரபாகரன் விரும்பியிருந்தால் மாகாண சபை முதல்வராக வருவதற்கான சகல வாய்ப்புக்களையும் இந்திய அரசு வழங்கி இருக்கும்.

தனியான மாளிகை தனியான பாதுகாப்புப்படை போன்ற ஏகப்பட்ட பந்தாக்களுடன் ஒருநாட்டின் பிரதமருக்கு ஈடான கௌரவத்துடன் பிரபாகரன் இருந்திருக்க முடியும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

அவர்தான் என்றும் புலிகள் கணிப்பிட்டு விட்டனர்.

ஒருமுறை பிரேமதாசாவுடன் புலிகளின் பிரதிநிதிகள் பேசிக் கொண்டிருந்தபோது, முகைதீன் சிற்றுண்டிகள் பரிமாறிக் கொண்டிருந்தார்.

அப்போது முகைதீன் செய்த காரியம் ஒன்று புலிகளின் கவனத்தில் விழுந்தது.

பிரேமதாசாவின் பார்வையில் படாது என்ற நம்பிக்கையில் சிற்றுண்டி ஒன்றை வாய்க்குள் திணித்து ருசிபார்த்துக் கொண்டிருந்தாராம்.

நல்ல சாப்பாட்டு மன்னன். ஆசையுள்ள ஆள். தட்டவேண்டிய இடத்தில் தட்டினால்



'ஐலன்ட்' வெளியிட்ட காட்டூண்– "இந்தியர்களே திரும்பிச் செல்லுங்கள்"

விழுந்துவிடுவார் என்று புலிகள் அப்போதே கணக்குப்போட்டுவிட்டனராம். காமினி திசநாயக்கா யார் மூலமோ அறிந்து பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் கூறிய தகவல்தான் அது.

## அபிவிருத்தி முழக்கங்கள்

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைக்க வேண்டும் என்பதும் இலங்கை அரசிடம் புலிகள் முன்வைத்த கோரிக்கையாகும்.

எனினும் இந்தியப் படைகள் வெளியேறிய பின்னரே அக் கோரிக்கையை வலியுறுத்தலாம் என நினைத்திருந்தனர்.

இதே நேரம், மாகாணசபையில் ஆளும் கட்சியாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் மக்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறிவந்தனர்.

வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு கனடா அரசு உதவப் போகிறது. கோடி கோடியாக

யேற்றங்களில் வீடுகள், வீதிகள், கல்விக் கூடங்கள், மருத்துவ நிலையங்கள் கட்டித் தரப்பட உள்ளது என்று வடக்கு கிழக்கு மாகாண சபை அறிவித்தது.

இந்த அறிவித்தல்களை நம்பிய மக்களை வைத்தே இந்தியப் படை வெளியேறக்கூடாது என்று கோரும் உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் என்பவையும் நடத்தப்பட்டன.

ஏதோ தாம்தான் நாட்டின் தீர்க்கமான சக்திகள் போலவும், தாம் நினைப்பதுதான் நடக்கும் என்பது போலவும் ஈ.பி.ஆர். எல்.எஃப். புதிய ஆரவாரமான திட்டங்களை அறிவித்துக் கொண்டிருந்தது.

இந்தப் பழைய சம்பவத்தை இப்போது நினைவு கூருதல் சுவாரசியம்தான்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளும், மக்களுக்கு இனிக்க இனிக்க ஆசை வார்த்தைகள் கூறிவருகின்றன. ஆனால் இதெல்லாம் மக்களுக்குப் புளித்துப் போய்விட்டன.

'உங்களுக்குத்தான் வாக்கு' என்று இனிக்க இனிக்கப் பேசிவிட்டு, மக்கள் யாருக்குமே வாக்குப் போடாமல் விட்டுவிடப் போகிறார்கள் என்றும் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

## வந்தனர்–சென்றனர்

இலங்கையில் இருந்து கட்டம் கட்டமாக இந்தியப் படையைத் திரும்ப அழைக்க இந்திய அரசு முடிவு செய்திருந்தது.

அதனையடுத்து வடக்கு-கிழக்கில் பல பகுதிகளில் இந்தியப் படை முகாம்கள் மூடப்பட்டன.

வழக்கமாக இப்படியான நிகழ்ச்சிகள் எந்த மாநிலத்தில் நடைபெற்றாலும், அந்த மாநிலத்தின் முதலமைச்சர் செல்ல வேண்டும். கலந்துகொள்ள வேண்டும்.

ஆனால், தமிழக முதல்வர் இந்தியப் படையினரை வரவேற்கச் செல்ல முடியாது என்று தீர்க்கமாகக் கூறிவிட்டார்.

தமிழக சட்டசபையில் அப் பிரச்சனையை கிளப்பினார்கள்.

"இந்திய படை அமைதிப்படையாக சென்று வந்திருந்தால் வரவேற்கச் சென்றிருப்பேன். அமளிப்படையாக, அங்குள்ள தமிழர்களை அழிக்கும் பணியாக நடந்து கொண்டுவிட்டு திரும்பி வருகிறது. அதனால்தான் வரவேற்கச் செல்லவில்லை" என்று கூறினார் கலைஞர் கருணாநிதி.

## பிரபாவின் செய்தி

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்திய காலகட்டத்தில் இலண்டனில் உலகத் தமிழர் சம்மேளனத்தின் மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டுக்கு பிரபாகரன் விடுத்த செய்தியில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"தமிழீழத்தை கட்டியெழுப்பும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் உதவவேண்டும்.

தமிழீழத்தை நோக்கிச் செல்லும் எமது இலட்சியப் பாதையில் முட்டுக் கட்டை போட எந்தச் சக்திகள் முயன்றாலும் அதற்கு இடமளிக்கமாட்டோம்"

பிரபாகரனின் செய்தி அதுதான். இலங்கை அரசுடன் நடைபெற்ற பேச்சுக்களில் நம்பி ஏமாறும் நிலையில் புலிகள் இருக்கவில்லை.

இலங்கை அரசுடன் கொழும்பில் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர்.

வன்னிக் காட்டில் பிரபாகரன் தன் உறுப்பினர்களுக்கு தெளிவாகக் கூறியது என்ன தெரியுமா?

"இந்தியப் படை வெளியேறிய பின்னர், சிறீலங்கா படைகளை வெளியேற்ற போரிட வேண்டும்."

அதனால்தான் இலங்கை அரசுடன் புலிகள் நடத்திய பேச்சுக்கள் விடயத்தில் இயக்கத்துக்குள் தளம்பலோ, சோர்வோ தலைகாட்டவில்லை.

1989ல் நடைபெற்ற சம்பவம் ஒன்று இன்றுவரை மர்மமாக உள்ளது. அந்த மர்மத்தை சற்று விலக்கிப் பார்ப்போமா?

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்